Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D.,
Public Relations Officer &
Professor (Agronomy)

Phone: 0422 - 6611302
Fax: 0422 – 2431821
E-mail: pro@tnau.ac.in

To
The Editor,

Date: 31-12-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

# Thai pattam Groundnut and Gingelly will be Remunerative

## Groundnut

India is one of the largest producers of groundnut in the world. Total world production of groundnut in 2013-14 is approximately 39.34 million tonnes. China, India, Nigeria, United States, Burma, and Indonesia are the major producers of groundnut globally. In India, groundnut production in Kharif (2012-13) was 26.20 lakh tonnes and 47.15 lakh tonnes in Kharif 2013-14 is anticipated. The major producers of groundnut are Gujarat (26.34 %), Andhra Pradesh (19.08 %), Rajasthan (17.68 %), Tamil Nadu (9.54 %), Karnataka (7.63 %), Madhya Pradesh (7.25 %) and Maharashtra (5.34).

In Tamil Nadu, during kharif 2013-14 about 1.80 lakh tonnes of groundnut is expected to be produced as informed by traders. Major groundnut production centres in Tamil Nadu are Villupuram, Tiruvannamalai, Cuddalore, Namakkal, Kancheepuram, Dharamapuri, Thanjavur and Salem districts. In most of these districts groundnut is sown during July to August (Adi pattam) and January to February (Thai pattam). In Thaipattam, it is grown under irrigated conditions. The peak arrivals are during March to May and lean arrivals are during November to December. TMV10 (locally called Pattani) variety is mosty grown for oil purpose. TMV7, TMV2, VRI2, JL24 (specific for confectionery) are the varieties widely cultivated by the farmers in Tamil Nadu.

To facilitate farmers to take up sowing decisions, NAIP –Domestic and Export Market Intelligence Cell functioning in Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analyzed the past 13 year prices prevailed in Tindivanam Regulated Market for groundnut kernal and Sevur Regulated Market for groundnut pod. The econometric analysis of groundnut prices revealed that farmers could get a price of Rs 45-48/kg of kernel in Tindivanam area and Rs 35-37 / kg of groundnut pods around sevur market area during April, May 2014. Based on the above prices, farmers may take their sowing decision on groundnut in Thaipattam.

**Gingelly**

Sesamum is an important edible oilseed in India. Gingelly seed production in kharif (2012-13) was 3.40 lakh tonnes and about 3.50 lakh tonnes in kharif during 2013-14 is anticipated by traders. West Bengal, Orissa, Assam and Andhra Pradesh mostly produce red and black varieties while white gingelly is grown in Maharastra and other Western States. Gingelly is the major oilseed crop grown under rainfed conditions in almost all the states of India. In Tamil Nadu, about 50,000 tonnes is expected during kharif 2013-14. Erode, Karur, Thanjavur, Cuddalore, Salem, Villupuram, Tiruppur and Thiruvannamalai are the major districts that are contributed about 62 per cent of the state area and 44 per cent of the state production during 2011-12. Erode district has the highest productivity of 734 kg per hectare. Main varieties cultivated in Tamil Nadu are TMV 3, TMV 4, TMV 5,TMV 6, TMV 7 (Brown gingelly), CO1, (Black gingelly) and SVPR1, (White gingelly). Red gingelly varieties are used for oil purpose and black gingelly varieties are mainly used in confectionaries. Red gingelly accounts for more than 75 per cent of total gingelly trade in Tamil Nadu. White Gingelly mainly used for export. Domestic and Export Market Intelligence Cell, Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University, has analysed 13 years historical prices that prevailed in Sivagiri Regulated Market and the results reveal that the price of red gingelly would be around Rs 80-85 per kg during harvest period viz., April to May 2014. Farmers are requested to take their sowing decision on gingelly based on the above prices.

**For details contact:-**

Domestic and Export Market Intelligence Cell,
Centre for Agricultural and Rural development Studies,
Tamil Nadu Agricultural University,
Coimbatore - 641 003.
Phone No: 0422-2431405

**For Technical Details please contact**

Professor and Head,
Department of Oil Seeds,
Tamil Nadu Agricultural University,
Coimbatore-641 003.
Phone No: 0422-2450812

Publis Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 31-12-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தைப்பட்ட நிலக்கடலை மற்றும் எள் இலாபகரமாக இருக்கும்

**நிலக்கடலை**

உலகளவில் எண்ணெய் வித்துக்களில் நிலக்கடலை ஒரு முக்கியப் பயிராகும். உலகளவில் 2013-14ம் ஆண்டில் மொத்த நிலக்கடலை உற்பத்தி சுமாராக 39.34 மில்லியன் டன்களாகும். சீனா, இந்தியா, நைஜிரியா, அமெரிக்கா, பர்மா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் நிலக்கடலை உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் 2012-13ம் ஆண்டு கரீப் பருவத்தில் நிலக்கடலை உற்பத்தி 26.20 இலட்சம் டன்களாகும். இந்த ஆண்டு (2013-14) கரீப் பருவத்தில் 47.15 இலட்சம் டன்கள் உற்பத்தி ஆகும் என்று வர்த்தக மூலங்கள் தெரிவிக்கின்றன. குஜராத் (26.34 சதவீதம்), ஆந்திரப் பிரதேசம் (19.08 சதவீதம்), இராஜஸ்தான் (17.68 சதவீதம்), தமிழ்நாடு (9.57 சதவீதம்) கர்நாடகம் (7.63 சதவீதம்), மத்தியப் பிரதேசம் (7.25 சதவீதம்) மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் நிலக்கடலை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாட்டில் 2013-14 ம் ஆண்டில் கரீப் பருவத்தில் 1.80 இலட்சம் டன்கள் உற்பத்தி ஆகும் என வர்த்தகர்கள் எதிர் பார்க்கின்றனர். விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், நாமக்கல், காஞ்சிபுரம், தர்மபுரி, தஞ்சாவூர் மற்றும் சேலம் ஆகியன தமிழ்நாட்டின் மிக முக்கிய நிலக்கடலை உற்பத்தி செய்யும் மாவட்டங்களாகும். பெரும்பாலான மாவட்டங்களில் ஆடிப்பட்டம் மற்றும் தைப்பட்டத்தில் நிலக்கடலை பயிரிடப்படுகிறது. அதிகமான வரத்து மார்ச் மற்றும் மே மாதங்களிலும், குறைவான வரத்து நவம்பர் மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களிலும் இருக்கும். டி.எம்.வி-10 (பட்டாணி) இரகம் பெரும்பாலும் எண்ணெய்த் தேவைக்காக பயிரிடப்படுகிறது. டி.எம்.வி -7, டி.எம்.வி-2, வி.ஆர்.ஐ-2 மற்றும் ஜெ.எல்-24 (மிட்டாய்க்காக) ஆகிய இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. தைப்பட்டத்தில் இது இறவையில் பயிரிடப்படும். தைப்பட்டத்தில் நிலக்கடலை பயிரிடும் முடிவுகளை எடுப்பதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது திண்டிவனம் மற்றும் சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கடந்த 13 வருடம் நிலவிய விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின்படி ஏப்ரல்- மே 2014 அறுவடையின் போது திண்டிவனம் பகுதிகளில் நிலக்கடலைப் பருப்புக்கு ஒரு கிலோவிற்கு ரூ.45-48 மற்றும் சேவூர் சந்தைப் பகுதிகளில் நிலக்கடலைக் காய்க்கு ரூ.35-37

வரை கிடைக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**எள்**

இந்தியாவில் எள், முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒன்றாகும். இந்தியாவில் 2012-13ஆம் ஆண்டு கரீப் பருவத்தில் அதன் உற்பத்தி 3.40 இலட்சம் டன்களாகும். இது 2013-14ம் ஆண்டு கரீப் பருவத்தில் 3.50 டன்களாக இருக்கும் என வர்த்தக மூலங்கள் தெரிவிக்கின்றன. மேற்கு வங்காளம், ஒடிஸா, அசாம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சிவப்பு மற்றும் கருப்பு இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. மகாராஷ்டிரா மற்றும் இதர மேற்கு மாநிலங்களில வெள்ளை எள் பெருமளவில் பயிரிடப்படுகிறது.

தமிழ் நாட்டில் 2013-14ம் ஆண்டு கரீப் பருவத்தில் சுமார் 50,000 டன் உற்பத்தி ஆகும் என எதிர்பார்க்கபடுகிறது. ஈரோடு, கரூர், தஞ்சாவூர், கடலூர், சேலம், விழுப்புரம், திருப்பூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்கள் தமிழ்நாட்டில் எள் பரப்பளவில் 62 சதவீதத்தையும், உற்பத்தியில் 44 சதவீதத்தையும் அளிக்கின்றன. ஈரோடு மாவட்டத்தில் உற்பத்தித் திறன் அதிகபட்சமாக ஒரு எக்டருக்கு 734 கிலோவாக உள்ளது. தமிழ்நாட்டில் டி.எம்.வி 3, டி.எம்.வி 4, டி.எம்.வி 5, டி.எம்.வி 6, டி.எம்.வி 7 (சிவப்பு எள்), கோ1 (கருப்பு எள்) எஸ்.வி.பி.ஆர்.1 (வெள்ளை எள்) ஆகிய முக்கிய இரகங்கள் பயிரிடப்படுகின்றன. தமிழ்நாட்டில் டி.எம்.வி 3, டி.எம்.வி 4, டி.எம்.வி 5, டி.எம்.வி 6, டி.எம்.வி 7 (சிவப்பு எள்) பெரும்பாலும் எண்ணெய்த் தேவைக்காக பயிரிடப்படுகிறது. கோ1, கருப்பு எள் இரகங்கள் மிட்டாய் போன்ற இனிப்புகள் தயாரிப்புக்கு அதிக அளவில் பயன்படுகிறது. எஸ்.வி.பி.ஆர்.1 (வெள்ளை எள்) இரகம் ஏற்றுமதிக்குப் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் மொத்த வரத்தில் 75 சதவீதம் சிவப்பு எள்ளாகும். உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் 13 வருட விலைகளை ஆய்வு செய்ததில் அறுவடையின் போது சிவப்பு எள்ளின் விலை ஏப்ரல் - மே 2014ல் கிலோ ஒன்றுக்கு ரூ. 80-85 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விலைகளைக் கருத்தில் கொண்டு எள் விதைப்பு முடிவுகளை எடுக்கும் படி விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003.
தொலைபேசி -0422-2431405

**மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:-**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி - 0422-2450812

மக்கள் தொடர்பு அலுவலர்